15/3-75.

R. P. no: 920/55-/20

Y 73 P(31) : 351
N 75

Y

கழக வெளியீடு : க௯௨௪

# தாய்மார் வளர்த்த தமிழ்

★

ஆசிரியர் :

புலவர் இரா இளங்குமரன்

★

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.
1975

இராமு இளங்குமரன் (1930)

© 1975 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Branches:

Tirunelveli-6. Madurai-1. Coimbatore-1.
Kumbakonam-1. Tiruchirappalli-2.

Y73 (P31) : 351
N75

Ed 1 February 1975

Y73(P31):351
N75

105811

THAAIMAAR VALARTHTHA THAMIZH

Appar Achakam, Madras-1. (1/2)

# பதிப்புரை

குழந்தைகளைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டும் வழக்கம் பிற நாடுகளிலும் உண்டு என்றாலும் தமிழ் நாட்டில் அது பெருவழக்காய் உள்ளது. நாவினை அசைத்துப் பாட்டுப் பாடிக் குழந்தைகளைத் துயிலச் செய்வதே இங்குக் குறிப்பிடப்பெறுகின்றது.

அங்ஙனம் தாலாட்டும்போது அக் குழந்தையின் முன்னோர் பெருமைகளையும், வீரச் செயல்களையும், பொது நலப் பணிகளையும் தாய்மார் எடுத்துக்கூறித் தாலாட்டுவர். குழந்தைகள் தம் செவியாற் கேட்டு உணர்ச்சியும் அறிவும் பெறுவர். அவற்றை எடுத்து உரைத்துப் பாடுவதால் தாய்மார் மகிழ்ச்சியும் தற்பெருமையும், மனநிறைவும் கொள்வர். அப் பாடல்களைக் கேட்கும் பிறரும் அக் குடி யின் பெருமைகளை நினைவுகூர்வர். ஆதலால் தாலாட்டுப் பாடல்கள் கலைவளர்ச்சிப் பாடல்கள் எனவே தமிழ் மக்களால் பாராட்டப்படுகின்றன.

தமிழறிஞர்களான, கவிமணியின் பாடல்களும், திரு. ராய. சொ. அவர்களின் பாடல்களும் இந் நூலில் சேர்க்கப்பெற்றுள்ளன. பெரும் புலவர்களின் பாடல்கள் மட்டுமேயன்றிச் சிற்றூர்களில் வாழும் தாய்மார் உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்த இயற்கையான பாடல் களும் இந்நூலில் உள்ளன.

இந் நூலில் உள்ள பாடல்களைப் படிக்கின்றவர்க ளுடைய உள்ளத்தில் உவகைத்தேன் பெருகும் என்பதில் ஐயமில்லை.

'தாய்மார் வளர்த்த தமிழ்' என்னும் பெயரில் சிறந்த பாடல்களைத் தொகுத்து விளக்கவுரையும் எழுதி யுதவிய புலவர் இரா. இளங்குமரன் அவர்கட்குக் கழகத்தின் நன்றி யுரியது.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கொட்டி வைத்த முத்து | 1 |
| 2. | தித்திக்கும் தேனமுது | 3 |
| 3. | கண்ணே கமலப்பூ | 5 |
| 4. | மலரும் இளம் பிறை | 7 |
| 5. | வரங் கொடுத்த பூமாலை | 9 |
| 6. | வண்டு மல்லி கொய்ய வந்த வடிவழகு | 14 |
| 7. | ஆணிப்பொன் தொட்டில் | 15 |
| 8. | கண்ணே உறங்கு | 21 |
| 9. | அடித்தாரைச் சொல்லியழு | 26 |
| 10. | பாலன் பசித்தழுவான் | 29 |
| 11. | படிக்க மடங்கட்டும் பாண்டியன் | 33 |
| 12. | நாட்டுக்கு அதிபதி நல்லதுரை | 37 |
| 13. | வாரி இறையுங்கள் வரிசைமகன் காதரிசி | 41 |
| 14. | வேறொருவர் தஞ்சமில்லை | 45 |
| 15. | வண்ணக் குடைபிடித்து வாசிக்க வந்தவள் | 47 |
| 16. | ஆராரோ ஆரிவரோ ஆராரோ | 50 |
| 17. | பிள்ளைத்தமிழ் | 54 |


———

# தாய்மார் வளர்த்த தமிழ்

## (தாலாட்டு)

—⁂—

### 1. கொட்டி வைத்த முத்து

பெற்றவள் செல்வச் செழிப்பு உடையவளாக இருக்கலாம்; அல்லது, "அடுத்த வேளை உணவுக்கு என்ன செய்வோம்" என்று ஏங்குபவளாக இருக்கலாம். ஆனால், அவள் கையிலே அழியாச் செல்வம் ஒன்று உள்ளது; அது மக்கட் செல்வம்! அச் செல்வம் மற்றைச் செல்வங்கள் இருந்தாலும் இல்லையானாலும் தனிச் செல்வமாகச் செங்கோல் செலுத்துகின்றது.

தாயுள்ளம் தூய உள்ளம்; அன்பே உருவான உள்ளம்; பேருள்ளம்; செல்வச் செழிப்பில், செம்மாந்த உள்ளம்; தன் கையிலே ஒன்பான் மணிகளும், ஒழியாச் செல்வங்களும் ஒன்றுகூடி வாய்த்திருப்பதாகக் கருதும் கற்பனையுள்ளம்; கவிதையுள்ளம். அவ்வுள்ளம் வாய்த்தவள் வறியவளாக இருப்பாளா?

தான் பெற்றெடுத்த பிள்ளைச் செல்வத்திற்கு ஒப்பான செல்வம் ஒன்று உலகில் உண்டா? உயர்வான செல்வம் ஒன்று உண்டா? என்று நினைக்கிறாள். 'இல்லை' என்றே முடிவு செய்கின்றாள். அச் செல்வத்தைப் பெற்றெடுத்த

பெருமைக்கு உரியவள் அவள் அல்லவா! அந்த இன்ப வெள்ளத்தில் எல்லே காணமாட்டாமல் நீந்துகிருள்! அதனுல் உள்ளம் பொங்கிப் பூரிப்பு அடைகிருள். அப் பூரிப்பே தாலாட்டுப் பாட்டாகத் ததும்பி வழிகின்றது! கையிலே கட்டி வைரத்தை வைத்திருப்பவளுக்கு மற்றைக் கடைப் பொருள்கள் எல்லாம் 'கடைப் பொருள்கள்' தாமே! பாடுகிருள் தாலாட்டு:

கொட்டிவைத்த முத்தே!
குவித்தநவ ரத்தினமே!
கட்டிப் பசும்பொன்னே!
கண்மணியே! கண்வளராய்!

மாற்றில்லாப் பொன்னே!
மண்டலத் ததிபதியே;
காற்றில் அசைந்தாடும்
கமலம்போல் கண்வளராய்!

## 2. தித்திக்கும் தேனமுது

பொன்னும் மணியும் முத்தும் விலை மிக்கவைதாம். பொலிவும் மிக்கவைதாம்; கண்டவர்களைக் கவரும் எழிலும் உடையவைதாம்; ஆயினும் குழந்தை இத்தன்மைகளுடன் அமைந்து நிற்கும் பொருளா?

குழந்தை, 'பிள்ளைக் கனி அமுது' அல்லவா! 'கட்டிக் கரும்பு' அல்லவா! தித்திக்கும் தேன்குடம் அல்லவா! அத்தகையதைப் 'பொன்' என்றும் 'மணி' என்றும் பாராட்டிய அளவில் தாயுள்ளம் அமையுமா?

குழந்தையின் மழலையாகிய கரும்புச் சாற்றை—கனிப் பிழிவை—தேன் பாகை — அமிழ்தச் சுவையைச் செவிகளால் பருகிப் பருகி இன்புறுபவள் அவள்; உள்ளம் தேக்கெறிய நிற்பவள் அவள்; உணர்வு ததும்பி வழிய அள்ளி அள்ளிப் பருகியவள் அவள். ஆதலால், குழந்தைச் சுவையிலே ஈடுபட்டுக் கொஞ்சிக் கொஞ்சிக் குழைந்து பாடுகின்றாள் தாலாட்டு:

வாழைப் பழமோ?
    வைகாசி மாம்பழமோ?
கோவைப் பழமோ?
    கொண்டுவந்த ரஞ்சிதமோ?

சீமைச் சரக்கோ?
    தென்சீமைச் சர்க்கரையோ?
பாலுக்கு இசைவாகப்
    பழுத்த பலாக்கனியோ?

கல்இல்லா—என்
கணுவில்லாத் தீங்கரும்பு!
மண்இல்லா—என்
மறுவில்லாப் பச்சரிசி!

கண்ணே! நவமணியே!
கற்கண்டே! சர்க்கரையே!
பொன்னே! புதுமணியே!
போதுமென்ற பூச்சரமே!

முத்தோ? பவழமோ?
முக்கனியோ? சர்க்கரையோ?
தித்திக்கும் தேனமுதோ?
தெவிட்டாக் கனியோ நீ?

தித்திக்கும் பாலே
தெவிட்டாத தெள்ளமுதே
சித்தத்தின் உள்ளினிக்கும்
செங்கரும்பே கண்வளராய்.

## 3. கண்ணே கமலப்பூ

"உச்சி முகர்ந்துவிட்டால் -கண்ணம்மா!
உள்ளந்தான் கள்வெறி கொள்ளுதடி!"

என்று கண்ணம்மாளின் தாயாக நின்று பாடினர் பாரதியார். அவரே அவ்வாறு ஈடுபட்டுப் பாடினல் அவளைப் பெற்ற அன்னை உச்சி முகரும் இன்பத்தை விட்டு விடுவாளா? உரைத்து மகிழத் தவறி விடுவாளா?

நறுமணம் தருவது எது? 'மலரும் மணமும் போல' என்றுதானே மணமக்களை வாழ்த்துகின்றனர்! மலருக்குத் தானே மணம் இயற்கையானது! மற்றவற்றின் மணமெல்லாம் மலரின் சேர்க்கையால் ஏற்படுவன தாமே!

'குழந்தை மலரின்' மணம் இருக்கிறதே, அஃது எந்த மலருக்காவது உண்டா? பொழுதில் மலரும், பொழுதில் குவியும்! மலரில் தேன் ஒழுகும், வற்றும்; அஃது அரும்பும் மலரும் உலரும் வீழும்!—இவையெல்லாம் குழந்தை மலருக்குப் பொழுதுதோறும் ஏற்படுமா? இத்தகைய தனியுயர் மணமலரை மணிவயிற்றில் தாங்கியிருந்த 'பூங்கொடி' தாய் அல்லவா! அவளுக்குத்தானே அந்த மலரின் அருமையும் நயமும் அழகாகத் தெரியும்! குழந்தை மலரின் மணத்தைப் பரப்புகிருள் பண்ணொழுகும் பாட்டி ஞலே! ஏன் அவள் பாட்டியாகிக் கூட இருக்கலாமே! பல் இல்லாவிட்டாலும் பாட்டி பாடும் பாட்டு பாகுக் கட்டி அல்லவா!

கண்ணே கமலப்பூ!
காதிரண்டும் வள்ளைப்பூ!
முல்லே முருக்கம்பூ!
மேனியெலாம் தாழம்பூ

பொன்னிலும் தங்கமோ?
பூவிலும் அதிமணமோ?
முன்னுள்ள ராசாக்கள்
முடிக்கும் மருக்கொழுந்தோ?

அழுதால் அரும்புதிரும்!
அண்ணுந்தால் பொன்னுதிரும்!
சிரித்தால் முத்துதிரும்!
சீமைராசா பெற்றகண்ணே!

கொத்து மருக்கொழுந்தே!
கோமளப் பூங்கொடியே!
முத்துச் சரமேஎன்
மோகனமே கண்ணுறங்கு!

பொன்னில் உறுமொளியே!
பூவிலுள வாசனையே!
கொடிக்கால் மருக்கொழுந்தே!
கோதகையின் பூச்சரமே!

## 4. மலரும் இளம் பிறை

மாசில் வீணை; மாலைமதியம்; வீசுதென்றல்; வீங்கிள வேனில்; மூசுவண்டு அறை பொய்கை - ஆகியவற்றில் உள்ளத்தைப் பறிகொடுத்தார் நாவுக்கரசர்! ஆனால், ஒரு தாய்க்கு அவ்வினைத்தின் உருவம் தன் குழந்தையாகவே தோற்றம் அளிக்கின்றது.

நிலா நிலா ஓடிவா! நில்லாமல் ஓடிவா; மலைமேலே ஏறிவா; மல்லிகைப்பூ கொண்டுவா! என்று குழந்தைக்குக் காட்டிக் காட்டி மகிழ்ந்த தாய்க்குக் குழந்தையே 'முழுமை நிலா அழகு நிலா' வாகக் காட்சியளிக்கின்றது. தன் இருண்ட வாழ்விலே சுடரொளி பரப்ப வந்த பிறை நிலாவே இப் பிள்ளை எனக் களிக்கின்றாள். இப் பிஞ்சுப் பிறை பின்னாளில் முழுநிலாவாகத் திகழப்போவதை நினைந்து பூரிக்கின்றாள். அந்தப் பூரிப்பு பாட்டுருக் கொள்ளுகின்றது.

தாய் காணும் பிறை வானப் பிறை மட்டும் அன்று! தெய்வப் பிறை; சிவபெருமான் செஞ்சடைமேல் இருக்கும் வெண்பிறை! அப் பிறையே வந்து 'அம்மா' என்று அழைக்குமானால் அவள் மண்ணிலே நடப்பாளா? விண்ணிலே பறக்கமாட்டாளா?

ஆடிப் பிறையோ?
அழகான தைப்பிறையோ?
மாசிப் பிறையோ?
மலரும் இளம்பிறையோ

வினு: தேசப் பிறையேநான்
தேடியநாள் எங்கிருந்தாய்?

[வினவிய அன்னையே விடையும் கூறுகின்ருள்]

விடை: தேடிய நாளெல்லாம்
சிவனிடத்தில் போயிருந்து
வாடிய நாளையிலே
வந்துகலி தீர்த்தகண்ணே!

[பிறை நிலா வீட்டுக்குள் வந்து ஒளி பரப்புமா? இதோ ஒளி பரப்புகிறதே பிள்ளை! வீட்டு விளக்கு இஃது என்று தாயுள்ளம் கருதுகிறது.]

குழந்தை பிறக்கு முன்னே வீடு வெறிச்சோடி இருண்டுபோய்க் கிடந்தது. விளக்கேற்றி வைக்க வந்த அவளுக்கு விளக்கேற்றி வைக்க ஆள்வேண்டி இருந்தது. அந்த ஆள் யார்?

நாடு இருந்தது; நாடாளும் வேந்தனுக்கு மாளிகையும் இருந்தது; அந்த மாளிகைக்கு அழகுசெய்யும் அரசன் வேண்டாவா? அரசி வேண்டாவா? அவர் யார்?

எல்லாம் குழந்தைகளேதாம்!

விளக்கில்லா வீடே!
வேந்தனில்லா மாளிகையே!
அரசில்லா வீட்டுக்கு
அரசாள வந்தகண்ணே!

———

## 5. வரங்கொடுத்த பூமாலை

"வில்லை வளைப்பவன் ஒருவன்; வில்லாக இருப்பவர் பெற்றோர்; அம்பாக வீழ்பவர் பிள்ளைகள்" என்று புலவர் ஒருவர் நயமாகக் கூறினார்.

வில்லை வளைப்பவன் எவன்? இறைவன்! இறைவன் அருளால் மக்கள் பிறக்கின்றனர் என்பதைக் கற்பனை நயம் செறிய இவ்வாறு கூறினார்.

இறைவன் அருள்வதற்குத்தானே 'திருவருட் பேறு' என்பது. மக்கட்பேறு மட்டும் அதற்கு விலக்காகிவிடுமா? இந்த எண்ணம் தாய்மை உள்ளத்தில் பெருக்கெடுத்துத் தாலாட்டாக வெளிப்படுகின்றது.

சிலபல ஆண்டுகள் மக்கட்பேறு வாய்க்காமல் இருந்து, திருக்கோயில் என்ன திருக்குளம் என்ன என்று அலைந்து, அந்த நோன்பு, இந்த நோன்பு என்று இருந்து ஒரு குழந்தையைப் பெற்றால், அப் பெற்றவர்க்கு-சிறப்பாகப் பெற்றவளுக்குத்—தெய்வம் அருளிய பேறு என்று தோன்றாமல் இருக்குமா?

எத்தனை கோயில்களுக்குச் செல்லுகிறாள்? எத்தனை தெய்வங்களை வேண்டிக் கிடக்கிறாள்? எத்தனை எத்தனை நோன்புகளைக் கடைப்பிடிக்கிறாள்? இவற்றை யெல்லாம் தாலாட்டிலே சொல்லிக் காட்டுகின்றாள். பட்ட பாட்டின் பயனாகப் பாலனைக் கண்டதும் பாட்டுப் பொழிகிறாள். தானும் தன் தலைவனும் கொண்ட குழந்தைத் திருவுலாவை

மட்டுமா சொல்கிருள்? அவர்கள் பெற்ருேர்களும் பேரக் குழந்தையைக் காணுவதற்காகப் படும் பாட்டையும் கூறு கிருள்:

செவ்விளனி மாலை
    சிவன்தந்த பூமாலை
வாடாத மாலையென்று
    வரங்கொடுத்த பூமாலை.

ஆற்று மணலிலே
    அருந்தவம் செய்கையிலே
பார்த்திருந்த பரமசிவன்
    பாலனுனைத் தந்தாரே.

அஞ்சு சடையாண்டி
    ஆறுமுக வேலாண்டி
பிச்சைக்கு வந்தாரே
    பிள்ளைக்கனி தந்தாரே.

பச்சை நிறவள்ளி
    பவழநிறத் தெய்வானை
சோதி நிறவேலர்
    சொல்லிவரம் தந்தாரோ?

[எத்தனை கோயில்களுக்குப் போகின்றனர்? எங்கெங் கெல்லாம் திருமுழுக்கு ஆடுகின்றனர்?]

பாலாறு கண்டேன்
    பழனித் தலங்கண்டேன்
ஏழாறு தலமுழுகி
    ஏந்தினேன் பாலகனை

தங்கநிறத் தென்காசி
    தனிக்கிராமம் ராமேசுவரம்
பொங்குமாம் குற்ருலம்
    போய்முழுகி வந்தானும்.

[எத்தனை கோயில்களைத்தான் சொல்வது ?]

கண்ணே உனைத்தேடி
காலெல்லாம் புற்றோடி
பொன்னே உனைத்தேடிப்
போகாத கோயிலில்லை.

[எப்படிக் கும்பிட்டாள்? என்னென்ன நோன்பு கொண்டாள் ?]

மலையைச் செதுக்கி
மண்டபங்கள் உண்டாக்கி
சிலையைச் செதுக்கிச்
செய்துவந்த பூசையினால்

வேலர் மகிழ்வாகி
வேதனையைத் தீர்த்துவிடப்
பாலன் உனையேந்தும்
பாக்கியத்தைத் தந்தாரே.

ஆற்று மணலிலே
அருந்தவம் செய்கையிலே
குளத்து மணலிலே
கோடிதவம் செய்கையிலே
குதித்துவந்த பாலகனே
கோமளமே கண்ணுறங்கு.

அறுநூற்றுக் காதவழி
அரசுவைத்து நீர்ப்பாய்ச்சி
அரும்பாச் சொரியயிலே
அருந்தவத்தால் நீபிறந்தாய் !

தொண்ணூற்றுக் காதவழி
துளசிவைத்து நீர்ப்பாய்ச்சிப்
பூவாச் சொரியயிலே
புண்ணியத்தால் நீபிறந்தாய் !

வெள்ளி முழுகி
வெகுநாள் தவசிருந்து
வேம்பரசு சுற்றி
விநாயகரைக் கைதொழுது
சனிமெழுகிச் சாதமிட்டுச்
சந்திரரைக் கைதொழுது
அள்ளி மிளகுதின்று
அருணகிரி நோன்பிருந்து
முள்ளி மிளகுதின்று
மூன்றுநாள் நோன்பிருந்து
கன்னி சிறையிருந்து
கண்டெடுத்த பாலகனே !

* * *

இலையாய்ப் பறந்திந்த
எல்லையெலாம் சுற்றிவந்தோம்
சருகாய்ப் பறந்தந்தச்
சன்னதியைச் சுற்றிவந்தோம்
கலைவிளங்கக் கோயில்கட்டிக்
கந்தரெனும் பேர்விளக்கி
அலையடிக்க வீற்றிருக்கும்
ஆறுமுக வேலவர்க்கு
முடிகழுவிப் பொன்கொடுத்துப்
புத்திரனும் வேண்டுமென்று
படிகழுவிக் கோலமிட்டுப்
பால்பசுவும் தானமிட்டுக்
கம்பத் தடியிலே
கையெடுத்து நிற்கையிலே
இலைவிபூதி தந்தாலோ
வாடிப்போம் என்றுசொல்லித்
திருநீறு தந்தாலோ
சிந்திப்போம் என்றுசொல்லி
கட்டிப்பூ தந்தாலோ
கசங்கிப்போம் என்றுசொல்லி

மாணிக்கம் இதோவென்று
　　மணிக்கொழுந்தைத் தந்தாராம்
காணிக்கை இதோவென்று
　　கைக்குழந்தை தந்தாராம்.

[பாட்டையா முயற்சியைப் பாடாமல் விடலாமா ?]

காசி விசிறிகொண்டு
　　கையிலொரு செம்புகொண்டு
புத்திரனை வேண்டிப்
　　போய்வந்தார் உங்களய்யா.

— —

## 6. வண்டுமல்லி கொய்யவந்த வடிவழகு

வரங்கிடந்த பின் வந்த பிள்ளையை வாயாரப் பாராட்டிய தாய்க்கு அக்குழந்தை தன் வயிற்றில் வந்து பிறந்த பெருமையான காரணங்களைச் சொல்லாமல் இருக்க முடியுமா?

விளக்கில்லா வீட்டுக்கு விளக்காக வந்தது குழந்தை!

வேந்தனில்லா நாட்டுக்கு வேந்தனாக வந்தது குழந்தை!—இவ்வளவுதானா இதன் வருகைச் சிறப்பு?

அவள்—அவள் மட்டுமென்ன?—அவனையுந்தான்! 'மலடு' இல்லை என்று வெளிப்படுத்த வந்தது குழந்தை அல்லவா!

தங்களைப் 'பிள்ளைக்காரர்' ஆக்கிய பெருமை இப் பிள்ளைக்குத்தானே உண்டு! அதனைப் பாராட்டாமல் இருக்கலாமா? குலஞ் சிறக்க வந்த கொள்ளை இன்பத்தைக் கூறுமல் இருக்கலாமா?

பயிர் வாடுங் காலத்து வந்த பருவமழை போலப் பிள்ளை பிறந்த காலத்தைக் கருதாமல் விடலாமா?

கூடு தேடும் பறவை போல வீடு தேடி வந்த விந்தையை விட்டுவிடலாமா?

காடு திருத்திக் கழனி யாக்க வந்த கவின் சிறப்பை அறங்காக்க வந்த அருமையை அடுக்காமல் விடலாமா?

நாடாள வந்த நல்ல செய்தி எத்துணை இனிப் பானது. அதனை நாளை என்று தள்ளிப் போடலாமா? இப்பொழுதே சொல்லி வைக்க வேண்டாவா?

சொல்லுகிருள்; சொல்லுகிருள்; சொல்லிச் சொல்லிச் சொக்கிப் போகிருள்! சொக்கத் தங்கத்திற்குச் சொந்தக் காரி அவளல்லவா! சொல்லாமல் விடுவாளா?

தங்கமோ பொன்னே
தனித்ததோர் வெண்கலமோ
எங்கள் குலம் மங்காமல்
எதிரிகுலம் ஏசாமல்
பெரியவர்கள் பேர்சொல்லப்
பிறந்த நவமணியே.

எங்கள்குலம் மங்காமல்
இருமலடு ஆகாமல்
மலடென்னும் வம்மிசத்தை
மறப்பிக்க வந்தகண்ணே!

இலைகருகிப் பயிர்வாடி—மழை
இல்லையென்று போனபின்னே
மழைத்துளிபோல் வந்திறங்கி
மனக்கவலை தீர்த்தகண்ணே!

மலட்டாறு தண்ணீர்வர
மாதுளையும் பூச்சொரியப்
புரட்டாசித் திங்களிலே
புண்ணியமாய் வந்தகண்ணே!

வடக்கே மலைகருக்க
வண்டுமல்லி பூத்திருக்க
வண்டுமல்லி கொய்யவந்த
வடிவழகே கண்வளராய்.

சிற்ருறு வற்றிச்
சிறுகடலும் பாசிபற்றி
வற்ருத பொய்கையிலே
வந்துதித்த வான்மயிலே.

தேனும் தினைமாவும்
தின்னையிலே நாவுலரப்
பாலமிர்தம் கொண்டு
பசிதீர்க்க வந்தவனே.

தாழையும் வெள்ளறுகும்
தழையாத கானலிலே
வாழையும் வான்கரும்பும்
வைக்கப் பிறந்தவனே ?

வண்ணக் கிளியெல்லாம்
வயலிறங்கி மேய்கையிலே
கிலுகிலுப்பைக் கொட்டானல்
கிளியோட்ட வந்தவனே ?

வங்காரப் பறவையெலாம்
வயலிறங்கி மேய்கையிலே
சிங்கார வில்லெடுத்துச்
சிறகொடிக்க வந்தவனே ?

மாமன் அளந்தளவு
மாருட்டம் ஆகுதென்று
தானளக்க வேண்டுமென்று
தவம்பெற்று வந்தாயோ ?

மானடையும் சோலை
மயிலடையும் பூஞ்சோலை
தானுறங்க வேண்டுமென்று
தவஞ்செய்து வந்தாயோ ?

மானுறங்கும் கட்டிலிலே
மயிலுறங்கும் தொட்டிலிலே

தானுறங்க வேண்டுமென்று
தவம்பெற்று வந்தாயோ?

பாட்டனார் ஆண்ட
பதினெட்டு ராச்சியமும்
மற்றொருவர் ஆளாமல்
மறித்தாள வந்தகண்ணே?

மாமனார் பட்டணத்தை
மற்றொருவர் ஆளாமல்
தானாள வேண்டுமென்று
தவம்பெற்று வந்தகண்ணே?

# 7. ஆணிப்பொன் தொட்டில்

தொட்டிலில் குழந்தையைப் போட்டு ஆட்டும் தாய்க்கு அத்தொட்டிலின் அழகு உள்ளங் கவர்கின்றது; தூரியும் கவர்கின்றது: தூரி என்பது என்ன? ஊஞ்சல் கட்டிலுக்குத் தாய் தந்த தனிப்பெயர் அது.

"ஆடுமாம் தொட்டில்; அசையுமாம் தூரி" என்று இரண்டையுமே சேர்த்துக் கூறுவாள் தாய்;

தொட்டில் ஆனால், ஒருத்திதானே ஆட்டமுடியும்! தூரியானால் நாலைந்து பேர் நின்று கூட ஆடிப்பாடி ஆட்டலாமே! தொட்டிலில் குழந்தையின் முக அழகை மட்டும் தானே பார்த்துக் கொண்டு ஆட்ட முடியும்! தூரி யானால் முகத்தழகும், முன்னழகும், பின்னழகும், முழு அழகும் பார்த்து 'முத்தமாரி' பொழிந்து ஆட்டலாமே!

தொட்டிலிலே எளிமை கொஞ்சும்; தூரியிலே செல்வச் செழிப்பு விளையாடும். இருந்தாலும் 'பொன்னு மகன்' 'தங்கமகள்' ஆடும் தொட்டிலும் தூரியும் தாய்க்கு அழகுப் பொருள்கள்தாம்! கலைச் செல்வங்கள் தாம்.

தொட்டிலும் தூரியும் குழந்தைக்குத் தருபவர் யார்? தாய்மாமன் அல்லவா தருவான்? அவன் யாவன்? தாலாட்டும் தாய்க்கு உடன் பிறந்தவன் அல்லவா! அதனால் தன் உடன் பிறந்தான் தந்த அந்தச் சீர் வரிசையை நினைந்து 'கிளுகிளுப்பு' அடைவாள்! தன் பிறந்தகப் பெருமையைச் சொல்லிக் கொள்ள நல்ல வாய்ப்பு—தேடிவந்த வாய்ப்பு —இல்லையா?

தொட்டிற் கம்பு தேடியது—தொட்டிலைச் செய்ய ஊர் ஊராகக் கலைத் தேர்ச்சியாளரைக் கண்டு தேடியது—செய்த சிறப்பு எல்லாம் அவர் பாட்டிலே வெளிப்படும்!

"மகத வினைஞரும்
மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும்
யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர்
தம்மொடு கூடிக்
கொண்டினி தியற்றிய"

மண்டபச் சிறப்பை மணிமேகலை பாடுகின்றது! அம் மண்டபத்திற்குக் குறைந்த வேலைப்பாடு உடையதா தாய் மாமன் தந்த தூரிக் கட்டில்! தாய்மாமன் பரிசு வேந்தன் பரிசையும் வென்றுவிடாதா என்ன?

ஏழறையாம் கோபுரமாம்
எறும்பேறு மண்டபமாம்
பாம்பேறு மண்டபத்தே
பள்ளிகொள்ள வந்தாயோ?

மாணிக்கக் கால்நாட்டி
வச்ரத்தால் வடம்பூட்டி
ஆணிப்பொன் தொட்டிகட்டி
அருமருந்தே கண்வளராய்.

வர்ணப்பூந் தொட்டிலிலே
வகைவகையாய்ப் பட்டுடுத்திச்
சொர்ணப்பூந் தொட்டிலிலே
நித்திரையும் போவாயோ?

பச்சை இலுப்பைவெட்டிப்
பால்வடியாத் தொட்டில்கட்டிக்
குங்குமத் தொட்டிலிலே
குலுங்கிடும் பாலகனும்.

ஆடுதாம் தூரியும்
அலைகிறதாம் பொன்னூஞ்சல்
பொன்னூஞ்சல் மேலிருந்து
பொய்யுறக்கம் கொண்டவனோ?

தில்லைவனம் தட்டான்
திருப்புவனம் ஆசாரி
காஞ்சிவனம் தட்டான்
கடம்பவனம் ஆசாரி
வாய்ச்சி உளிஇல்லாமல்
வரவழைத்தார் பொன்னூஞ்சல்.

## 8. கண்ணே உறங்கு!

தொட்டிலும் ஆயிற்று; தூரியும் ஆயிற்று! பிள்ளை உறங்க வேண்டாவா? உறங்கச் செய்வதற்குத்தானே தாலாட்டு!

உறங்கப் போட்டு ஆட்டினல் குழந்தை உறங்கினல் தானே!

குலுங்கக் குலுங்கத் தாய் ஆட்டுவாள்; பிள்ளையோ குலுங்கக் குலுங்கச் சிரிக்கும்! அஃது என்ன தான் கண்டதோ? தாய்க்குள்ள வேலையைப்பற்றி அதற்கென்ன கவலை!

இன்னுஞ் சில பிள்ளைகள் கண்ணை மூடிக்கொண்டு இருக்கும்; உறங்கிவிட்டது என்று தாய் உவகை கொள்வாள்; ஆட்டுவதை விடுவாள்; அவ்வளவுதான்! வீடே அலறிப்போக வீரிட்டு அழும்! தாயாகப் பிறந்தவள் தாங்கித்தானே ஆகவேண்டும்!

ஆட்டுகிற தாய்க்கு உறக்கம் ஆட்கொண்டாலும் ஆடுகிற குழந்தைக்கு உறக்கம் அணுகவே அணுகாது! ஆயினும் தாய்மை பொறுத்துக்கொண்டு ஆட்டுகிறது!

சில பிள்ளைகளைத் தொட்டிலில் போட்டால் போதும்! 'கண்ணே உறங்கு' என்று சொல்லுவதற்கு முன்னமே கண்ணுறங்கிவிடும்! அந்த அமைதிப் பிள்ளைகள்—உறக்கப் பிள்ளைகள்—தாலாட்டுக் கலையை வளர்க்கத் தெரியாத பிள்ளைகள்! அழுது அழுது அன்னைமாரை

ஆட்டிவைக்கும் பிள்ளைகளே, தாலாட்டுக் கலையை வளர்த்த பிள்ளைகள்! இல்லையா!

கண்ணே உறங்கு
　　கானகத்து மயிலுறங்கு
பொன்னே உறங்கு
　　பூமரத்து வண்டுறங்கு.

மானே உறங்கு
　　மயிலுறங்கும் இந்நேரம்
தேனே உறங்கு
　　திரவியமே கண்ணுறங்கு.

கூட்டுப் புருவுறங்கு
　　குயிலுறங்கும் இந்நேரம்
வீட்டுக் கிளியுறங்கு
　　விடிவெள்ளி நீயுறங்கு.

கண்ணே கருமணியே
　　கற்பகமே கனிச்சாறே
மண்ணிற் பிறந்தவொரு
　　மாமணியே கண்வளராய்.

பாண்டிக் கடல்முத்தே
　　பவழமே என்னுடைய
வேண்டுதல் தீர்க்கவந்த
　　வேந்தனே கண்வளராய்.

போட்டுப்பால் போட்டிப்
　　பூந்தொட்டி போட்டாட்டிப்
பண்ணுகப் பாடிடுவேன்
　　பசுங்கிளியே கண்ணுறங்கு.

தூங்கியெழு பால்தருவேன்
　　தோகைமயில் வான்கோழி
பாங்குடன் ஆடுவதைப்
　　பார்த்திடலாம் கண்வளராய்.

நித்திரைசெய் நித்திரைசெய்
சித்திரப்பூந் தொட்டிலிலே
சித்திரப்பூந் தொட்டிலிலே
சிகாமணியே கண்வளராய்.

கொத்து மருக்கொழுந்தே
கொடிமுல்லைப் பூச்சரமே
முத்துச் சரமே
முழுமதியே கண்வளராய்.

இராசாக்கள் மெத்தையிலே
இரத்தினப் பாய்விரித்து
மந்திரிமார் மேடையிலே
மல்லிகைப்பூ மெத்தையிட்டு.

வாழைவந்து வீசாதோ
வாழ்வரசி கண்வளர
தென்னைவந்து வீசாதோ
செல்வமகள் கண்வளர.

துணுக்குத் துணுக்காகத் 'தூரி' அழகைச் சொல்லி அமைதி கொள்ள முடியாமல் தொடர்கதை போலவே பாடுகின்ருள்! அவள் ஓர் இலக்கியச் செல்வி! கலையரசி! கற்பனை ஊற்று!

சதுரகிரி மலையேறிச்
சாதிலிங்கக் கட்டைவெட்டி
பார்த்துப் பணிப்படுத்திப்
பலசித்திரம் ஒப்பமிட்டுச்
சேர்த்துப் பணிப்படுத்திச்
சிலசித்திரம் ஒப்பமிட்டு

வலப்புறம் தொட்டிலுக்கு
வைரச் சிவப்பழுத்தி
இடப்புறம் தொட்டிலுக்கு
இரத்தினக் கல்லழுத்தி

முன்பாகத் தொட்டிலுக்கு
மும்மூர்த்தி பேரெழுதிப்
பின்பாகத் தொட்டிலுக்குப்
பெருமாளின் பேரெழுதி

அடிப்பாகத் தொட்டிலுக்கு
ஆதிசிவன் பேரெழுதி
பேசும் கிளியெழுதிப்
பெரியோர்கள் பேரெழுதி
பஞ்சாட்சரம் எழுதிப்
பாட்டனுர் பேரெழுதி

கொண்டுவந்து கண்டானே
கொம்பனையான் ஆசாரி
அடித்துவந்த ஆசாரி
அடைந்த வெகுமானம் :

கிண்ணியிலே சந்தனமும்
கிளிமூக்கு வெற்றிலையும்
அடித்தகைக்கு மோதிரமும்
அள்ளியிட்டார் சந்தனமும்
பிடித்தகைக்குப் பொன்காப்புப்
போட்டுவிட்டார் உன்மாமன் !

தொட்டில் வந்து விட்டது; தூங்கவிட்டு ஆட்ட வேண்டுமே! அதற்கும் தான் எத்தனை அழகு வேலைகள்!

தங்கம் கடைந்து
தமுறுவிட்டுத் தூண்நிறுத்தி
வெள்ளி வளையோடி
மேகவன்னத் தொட்டிலிட்டு
அன்னக் கொடியாளை
ஆட்டுங்கள் தொட்டிலிலே !
ஆடுமாம் தொட்டில்
அசையுமாம் பொன்னுணி;

ஓடுமாம் தொட்டில்
ஓசையிடும் பொன்னுணி;

* * *

தாமமுடியான் தவழுவான் என்று சொல்லித்
தங்கத்தால் தண்டுசேர்ப்பார் உங்களம்மான்!
மாலே முடியான் மதில்பிடிப்பான் என்றுசொல்லி
மாணிக்கத்தால் மதில்வளர்ப்பார் உங்களம்மான்

—

Y73(P31):351
N75

ARCHIVES LIBRARY
105811
MADRAS

## 9. அடித்தாரைச் சொல்லியழு

ஆட்ட ஆட்ட அழுதால் குழந்தையை என்ன செய்வது? அடித்து அடக்குவது அன்னைக்குப் பொருந்துமா? அரவணைத்து அல்லவா அழுகையைப் போக்க வேண்டும்?

குழந்தையைப் பேசவைக்க முடியுமா? அழவும் சிரிக்கவும் விரும்பியவாறு ஒலி எழுப்பவும் தானே குழந்தையால் முடியும்? அக்குழந்தைக்காக யார் பேசுவது? குழந்தைக்கு அன்னை தானே ஆசிரியை! அவள் தான் பேசுகிறாள்!

ஊமன் பேச்சையும் அவள் தாய் அறிவாளாம்! இந்தக் குழந்தை இருக்கிறதே அழவும் சிரிக்கவும் தெரிந்ததை அல்லாமல் விருப்பு வெறுப்பைக் கூடக் காட்டத் தெரியாதே. பன்னீர்க்கும் சிறுநீர்க்கும் வேற்றுமை அறியாதது ஆயிற்றே! இதன் உணர்வையும் தாய் உணர்ந்து கொள்வாளா?

தாயின் அறிவுக்கு அந்த ஆற்றல் இல்லை. அவள் தாய்மை என்னும் தெய்வ உணர்வு உடையவளாக இருக்கிறாள் அல்லவா! அந்தத் தெய்வ உணர்வுக்குத் தெரியாத செய்தி இல்லை! வெளிப்படாத எண்ணமில்லை.

தென்றற் காற்றுப் பட்டாலும் எழும்பி வீழும் பந்தினும் மெல்லிய, தாய் உள்ளத்தில் குழந்தையின் சிறிய உணர்வுக் கோடும் ஒளிப்படமாகப் பிடிக்கப்பட்டு விடுகின்றது! அந்தப் படத்தை உணர்வுப் பெருக்காடியில்

டம் போட்டுப் பார்த்துப் பன்னிப் பன்னிக் காரணம் கேட்கிருள்; அவளே பதில் மொழி கூறுகிருள்! காரணங்கள் தாம் எவ்வளவு நயமாக—சுவையாக— ஆக்கிப் படைத்துக் கொள்கிருள்! குழந்தையைக் கருக் கொண்ட போதே, கொஞ்சு தமிழ்க் கருவும் கொண்டு விட்டாள் போலும்!

வினு: அத்தை அடித்தாளோ
அரளிப்பூச் செண்டாலே?
பாட்டி அடித்தாளோ
பவழமல்லிச் செண்டாலே?

[இப் பாட்டையே கீழ்வருமாறும் கூறுவதுண்டு]

வினு: அத்தை அடித்தாளோ
அமுதூட்டும் கையாலே?
பாட்டி அடித்தாளோ
பாலூட்டும் கையாலே?
மாமன் அடித்தானே
மல்லிகைப்பூச் செண்டாலே?

வினு: அடித்தாரைச் சொல்லியழு
ஆக்கினைகள் செய்திடலாம்!
தொட்டாரைச் சொல்லியழு
தோள்விலங்கு போட்டிடுவோம்!

விடை: யாரும் அடிக்கவில்லை
ஐவிரலால் தீண்டவில்லை
அவனு அழுகின்ருன்
ஆத்தாள் மடிதேடி.

வினு: ஓடுமான் ஓட
ஒன்பதுமான் பின்தொடரக்
காட்டுமான் ஓடக்
கதறி அழுதாயோ?

பாலை விரும்பினையோ
பைங்கிளியே சொல்லியழு
சோலைப் பசுங்கிளியே
சுந்தரமே சொல்லியழு.

கொம்புக் கனியே
கோதில்லா மாங்கனியே
வம்புக் கழுகாதே
வாயெல்லாம் தேனூற.

வினா: ஏனழுதாய் என்கண்ணே
ஏலப்பூ வாய்நோவ?

விடை: பாலுக்கு நானழுதேன்
பஞ்சவர்கள் வாசலிலே.

## 10. பாலன் பசித்தழுவான்

பாலன் பாலுக்கு அழுகின்றன் என்று அறிந்து கொண்டாள் தாய். அவள் எண்ணம் பால் பசுவின்மேல் பாய்ந்து சென்றது.

ஔவையார் சேரவேந்தனிடம் சென்று பாலாடு ஒன்று கேட்டாராம். அவனே பொன்னால் செய்த ஆடு ஒன்றைப் பரிசாக வழங்கினனும். "வேந்தே, நின்னடு பொன்னடு" என்று பாராட்டினராம். ஆட்டையும் நாட்டையும் சேர்த்தே பாட்டி பாராட்டிவிட்டார். அவருக்கு நெடுநாட்களுக்கு முன்னும் ஓர் ஔவையார் இருந்தார். அவர் நாஞ்சில் வள்ளுவன் என்னும் பெயருடைய வள்ளல் ஒருவனிடம் கீரையில் போட்டுக் கடைதற்குப் பருப்புக் கேட்டார். அவனே பருப்புக்குப் பதில், பருத்த யானையையே பரிசாக வழங்கிவிட்டான். அப்பொழுது ஔவையார், "ஒரு வாய்க்கே உணவு இல்லாமல் நான் திண்டாடுகிறேன்; நால்வாய்க்கு (யானைக்கு) எப்படி உணவு தேடுவேன்" என்று நயமாகக் கூறினர். இத்தகைய நயம் தன் பாட்டில் வெளிப்படத் தாய் தாலாட்டுப் பாடுகின்றள்.

தன் பிள்ளைக்குப் பாலைப் பொழிந்து தரும் நல்ல பசுவைக் கொண்டு வந்திருக்கிறனே மாமன்—தன் உடன்பிறந்தான்! அப் பசுதான் எத்தகையது ?

"வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளற் பெரும் பசு" என்றரே ஆண்டாள் அம்மையார்! அப்படிப்பட்ட பசுவா?

ஔவையார் கூறிய பொன்னுடு போன்ற பொற் பசுவா? இரண்டு தன்மைகளும் ஒருங்கமைந்த ஒரு பசு—மாமன் கொண்டுவந்த மதிப்பான பசு.

பொன் மலருக்கு மணம் இல்லை. இவள் காணும் பொற் பசுவுக்குப் பாலைப் பொழியும் திறமும் இருந்தது என்ருல் பொன் மலருக்கு மணமும் உண்டு என்றுதானே சொல்ல வேண்டும்!

மாமன் பசுவைப் பிடிக்கத் தொடங்கியதில் இருந்து பசுவைப் பிடித்தது, அதன் அழகு—பால் கறத்தல்—காய்ச்சுதல்—சங்கு வாங்குதல்—போட்டுதல்—பசியாறுதல் ஆகியவற்றை யெல்லாம் அழகு அழகாக அளக்கின்ருள். சிறுகதையா அது? தொடர்கதை!

கொம்புக்குக் குப்பிகட்டிக்
கோல்விழிக்கு மைதீட்டி
வீசுகிற வாலுக்கு
வெண்சா மரைகட்டி

சுழலுகிற வாலுக்குச்
சுடர்மணிகள் ஏறவிட்டு
முதுகுக் கழகாக
முத்துச்சரம் தொங்கவிட்டு

முன்னங்கால் இரண்டுக்கும்
முழுவெள்ளித் தண்டையிட்டுப்
பின்னங்கால் இரண்டுக்கும்
பெருவெள்ளித் தண்டையிட்டு

மலையேறிப் புல்மேய்ந்து
மகுடமணி ஓசையிட
மாலை கருகருக்க
வந்துவிடும் பால்பசுவும்

பொழுதிருக்க வாபசுவே
    பொற்கொடியான் பால்குடிக்க
காலத்தே வாபசுவே
    கண்ணுமகன் பால்குடிக்க

* * *

பாலன் சிறுகுடலான்
    பசித்தழுவான் என்றுசொல்லிப்
பாலமுதம் வேண்டுமென்று
    புறப்பட்டார் உன்மாமன்

ஊரெல்லாம் சுற்றி
    ஒருபசுவும் கிட்டாமல்
நாடெல்லாம் சுற்றி
    நல்லபசுக் கிட்டாமல்
காடெல்லாம் சுற்றிக்
    காராம்பசு கொண்டுவந்தார்.

வாங்கிவந்த பசுவுக்கு
    வாலெல்லாம் தங்கநிறம்
அழைத்துவந்த பசுவுக்கு
    அங்கமெலாம் தங்கநிறம்
கொண்டுவந்த பசுவுக்குக்
    கொம்பெல்லாம் தங்கநிறம்.

கதறிவரும் பால்பசுவைக்
    கட்டுதும்பும் பொன்னாலே
அலறிவரும் பால்பசுவை
    அணிதும்பும் பொன்னாலே
அணைத்திருந்து பாலகறக்கும்
    அணைகயிறும் பொன்னாலே
சாய்ந்திருந்து பால்கறக்கச்
    சாதிலிங்கப் பொற்பலகை
பிடித்திருந்து பால்கறக்கப்
    பிடிதும்பும் பொன்னாலே

அடுப்பு மெழுகி
அணியணியாய்க் கோலமிட்டு
சந்தனக் கட்டை
சதிராய்ப் பிளந்தடுக்கித்
தங்கக் குழலெடுத்துத்
தரமுடையாள் தீமூட்டி
பொன்னுங் குழலெடுத்துப்
பொற்கொடியாள் தீமூட்டிக்
காய்ச்சுப்பால் காய்ச்சிக்
கலத்திலே விட்டாற்றிப்
போட்டுப்பால் போட்டிப்
பொன்தொட்டில் போட்டாட்ட

வையையாம் பொய்கை
வடக்கேயாம் பாலாறு
பாலாறு நீயாறு
பாலன் பசியாறு.

[பால் போட்டும் சங்கு எப்படிப்பட்டது ?]

கடைக்குக் கடைபார்த்துக்
கல்பதித்த சங்கெடுத்து
வாய்க்கு வயிரம்கட்டி
வாங்கிவந்தார் உங்களம்மான்.

[தன் குடும்பத்தையே இராமாயணக் குடும்பம் ஆக்கிக் கொண்டு பாடுகிருள் ஒரு தாய்]

இராமர் பசுவழைக்க
இலக்குமணன் பால்கறக்க
சீதையோ பால்காய்ச்சச்
செழித்ததோ பாலனுக்கு ?

## 11. படிக்க மடங்கட்டும் பாண்டியன்

தன் பெருமையைத் தானே கூறிக் கொள்வதை உலகம் மதிப்பது இல்லை. தன் புகழைப் பிறர் சொல்லக் கேட்கும்பொழுது பண்புடையவர் தலை நாணத்தால் குனியும். அவ்வாருகத் தன் புகழைத் தானே கூறுவது எப்படி?

"பிறர் எவருக்கும் தோன்ருத ஒரு கருத்துத் தனக்குத் தோன்றிய அறிஞுகை இருந்தால் கூட அவன் தன் புகழைத் தானே கூறுதல் தகுதி ஆகாது'' என்று நன்னூல் என்னும் நூல் கூறுகின்றது.

"கற்றவை, செயற்கரியதாகச் செய்தவை ஆயினும் சரி, பண்பு நலம் குடிப்பெருமை ஆயினும் சரி, பக்கத்தார் பாராட்டி உரைக்கவே பெருமைப்படும். அவற்றைத் தானே பாராட்டிக் கொள்வது கேலி செய்வார் பலர் பெருகி, 'இவன் எந்த மருந்துக்கும் கட்டுப்படாத கிறுக்கன்' என்று பழிக்கவே வழி செய்யும்'' என்று நாலடியார் என்னும் நூல் கூறுகின்றது.

இவ்வாறு இருக்கத் தாய் தன் தவம் பெற்ற பிள்ளையை விரித்து விரித்துப் பாடலாம். தன் புகழைத் தானே சொல்லிக் கொள்ளலாமா? சொல்லக் கூடாது என்பதற்காகத் தான் பிறந்த வீட்டுப் பெருமையையும் புகுந்த வீட்டுப் பெருமையையும் சொல்லாமல் விட்டு விட்டால் சுவைக்குமா? இதற்கு ஒரு வழியைக் கண்டு

பிடித்துக் கொண்டாள். தாய்மைச் செல்வியாகிய அவளுக்குச் சூழ்ச்சித் திறத்திலும் தேர்ச்சியுண்டு போலும்!

குழந்தையின் 'மாமன்' பெருமையை அடுக்கி அடுக்கிக் கூறுகிருள். அப் பெருமை தான் பிறந்த குடும்பப் பெருமை அல்லவா! தன் பெருமை தானே!

பிள்ளையின் தந்தையைப் பேசிப் பேசி மகிழ்கின்ருள். ஏன்? தன்னை அன்பால் மணந்து கொண்ட 'கொண்டான்' அவன் அல்லவா! அவன் கொண்ட பெருமைதானே தான் கொண்ட பெருமை!

இவர்களைப் பாராட்டிச் சொல்லும் பாராட்டுப் பாடல் களிலே முத்துச் சரத்தின் ஊடே இருக்கும் வெள்ளிக் கம்பி போலத் தன் புகழே ஊடுருவிக் கிடப்பதிலே அவளுக்கு ஒரு மறைமுகமான இன்பம்! பிறர் வழியாகத் தான் கொள்ளும் இன்பந் தானே தாய்மை இன்பம்!

குழந்தைக்கு மாமன் பெருமையையும் தந்தை பெருமையையும் ஏன் சொல்ல வேண்டும்? தன் பெருமைக்காக மட்டுமா? இல்லை! தங்கள் குடிப் பெருமை யைக் காக்க வேண்டியது இக் குமரன் குமரி கடமை அல்லவா!

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்று சொல்லு வார்களே! தொட்டிலிலேயும் கட்டிலிலேயும் சொல்லி வைக்கிருள் தோகை மயில் தன் பிஞ்சுக் குஞ்சுகளுக்கு! கொஞ்சும்போதே குடும்பப் பெருமையைக் கட்டிக் காக்கத் திட்டங்களைத் தீட்டித் தருகின்றது தாய்மை நெஞ்சம்! அந் நெஞ்சம் பாட்டாகிக் கூட்டமுதம் பொழிகின்றது.

சவுக்கை மெழுகிச்
சாதிலிங்கப் பாய்விரித்துச்
சாய்ந்து கணக்கெழுதும்
சமர்த்தன் உன் மாமன்.

குளிக்கக் குளங்கட்டிக்
கும்பிடக் கோயில்கட்டிப்
படிக்க மடங்கட்டும்
பாண்டியரே உன்மாமன்.

கடலைத் திடலாக்கிக்
கண்ணீரை முத்தாக்கி
முத்தெடுத்து முடிசூட்டும்
முடிமன்னர் உன்மாமன்.

சின்னக் கிணறுவெட்டிச்
சித்திரக் கல்பாவி
வண்ணக் கவிபாடி
வந்த புலவருக்குக்
குதிரைக் கொடைதருவார்
கோமளமே உன்மாமன்.

மதுரையிலே குதிரைகட்டி
மாந்தோப்பில் விடுதிகட்டிச்
சலுகையிலே வந்திறங்கும்
சமர்த்தர் மருமகனே.

கல்லெடுத்துக் கனியெறிந்து
கரடியொடு வாதாடி
வில்லெடுத்துச் சண்டைசெயும்
விசயன் மருமகளே.

காட்டைக் கலைத்துக்
கடிநாயை ஏவிவிட்டுச்
செடியைக் கலைத்துச்
செந்நாயைத் தூதனுப்பி
வேட்டைக்குப் போகின்றார்
வீரபுலி உன்மாமன்.

காடை படுமோ
கதுவாலி தான்படுமோ
பன்றி படுமோ
பலநிறத்து மான்படுமோ
சிங்கம் படுமோ
சின்னம்மான் வேட்டையிலே.

காலையிலே 'ரயி'லேறிக்
கல்கத்தா போயிறங்கி
விடிய 'ரயி'லேறிப்
பம்பாய்க்குப் போயிறங்கி
'கோடு' திறந்து
குறிச்சிமேல் காலாறி
பேசுகிருர் உன்மாமா
பெரிய சாட்சியிடம்
மதிக்குமதி சொல்லும்
மந்திரிக்குப் புத்திசொல்லும்
துரைக்கும் மதிசொல்லும்
துரைமகனே கண்ணுறங்கு.

[மாமன் வீடும் குடியும் எப்படி இருக்கிறது?]

வாசலிலே வன்னிமரம்
வம்மிசமும் இராசகுலம்
இந்திரகுல ராசனுக்கு
இசைந்த மருமகனே.

[மாமன் மாமியின் விருந்தோம்பும் அழகிலே தோய்கிருள்]

முத்துக்குத்திச் சோருக்கி
உண்ணென்பான் உன்மாமன்
பத்துவகைக் கறியாக்கி
உபசரிப்பாள் உன் அத்தை.

## 12. நாட்டுக்கு அதிபதி நல்லதுரை

பிறந்த வீட்டுப் பெருமையையே சொல்லிக்கொண்டு இருந்தால் புகுந்த வீட்டார்க்குப் பொங்கிவராதா கோபம்? அப்படி வந்தால், 'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது' என்னும் பழமொழி மெய்யாகிவிடுமல்லவா!

அதிலும், புகுந்த வீட்டிலே புகுந்த வீட்டார் இடையே அவர்கள் துணையிலே இருந்துகொண்டு அவர்களை எடுத்தெறிந்து பாடினால் அவளையே எடுத்தெறிந்து போட மாட்டார்களா? பிறந்த வீட்டை நினைத்துக்கொண்டு இருந்தாலே புகுந்த வீட்டில் பொருந்தாப் பழிகள் வருமே! அவ்வாறு இருக்கப் புகழ்ந்து வேறு பாடலாமா?

வீட்டுக்கு வெளியே திரியும் மாப்பிள்ளை கவலைப்படா விட்டாலும், அவனைப் பெற்றவளும், அவன்கூடப் பிறந்த பெண்களும் எளிமையாக விட்டுவிடுவார்களா? வரிந்து கட்டிக்கொண்டு வாய்ச் சண்டை கைச் சண்டையில் இறங்கிவிடமாட்டார்களா?

இவையெல்லாம் ஏற்படாமல் தடுக்க வழியென்ன? வழியும் வாய்க்காலும் தெரியாதவளா தாய்? 'மாமனுக்கு மேலே தன் மாப்பிள்ளையை—அவன் குடும்பத்தைப் பாராட்டிவிட்டால் யார் வருவார் சண்டைக்கு? ஒரு கட்டைப் போட்டு இறுக்கினால் என்ன? இன்னொரு கட்டை அதனினும் இறுக்கிப் போட்டால் அக் கட்டு தானே அவிழ்ந்து போகாதா? இக் கட்டும் தீராதா?

கொஞ்ச நாளைக்கு முன்னே—'அவரை'த்தான்—பெயரும் சொல்வது இல்லையே. கொஞ்சிக் கொஞ்சி மகிழ்ந்தாள். இப்பொழுது தன் கொஞ்சுதலை யெல்லாம் கொள்ளை கொள்ளப் பிள்ளை வந்துவிட்டது! அதன் தந்தை ஏங்கிப் போய்விடக்கூடாதே! அதற்கு ஒரு நல்ல வாய்ப்பை உண்டாக்கிக் கொள்கிருள் உவகை மிக்க தாய்.

பிள்ளைக்குத் தந்தையைப் பாடுவதில் அவளுக்கு எத்துணைப் பூரிப்பு! தன் மாப்பிள்ளையின் பெருமை யல்லவா அது! இப் பிள்ளை இல்லாவிட்டால் மாப்பிள்ளை யின் பெருமையைப் பிறர் எவராது கேட்கப் பாட முடியுமா? சொல்லவே முடியாதே! பாடுதற்கு வேரு! அந்தப் பெருமையைத் தவறவிடக்கூடாதே என்ற தணியாக் காதல் பெருவெள்ளப் பெருக்காகி உள்ளத்தில் இருந்து வழிந்து ஓடுகின்றது; பாடுகின்றது வாய்; பிள்ளையைப் பெற்ருேனின் அறச் செயல்களும் வீரச் செயல்களும் தாலாட்டில் விளையாடுகின்றன.

தவளை குரவையிடத்
    தாமரையும் பூமலரப்
பூவெடுத்துப் பூசைசெய்யும்
    புண்ணியஞர் பெற்றகண்ணே.

காட்டில் கிணறுவெட்டிக்
    கல்லாலே தொட்டிகட்டி
நாட்டுத் தருமஞ்செய்யும்
    நாணமுள்ளார் பெற்றகண்ணே.

வட்ட மணைபோட்டு
    வயிரமணை மேல்போட்டுச்
சட்டமுடன் பூசைசெய்யும்
    சமர்த்தரோ உங்கள் அப்பா.

கல்லைக் கயிருக்கிக்
கல்தூணை வில்லாக்கி
வில்லை விசையேற்றி
விட்டெறிந்தார் பாலகனே.

காடாய் இருந்ததெல்லாம்
கைலாயம் உண்டுபண்ணிச்
செடியாய் இருந்ததெல்லாம்
சிவத்தலமாய் உண்டுபண்ணிக்
குளிக்கக் கிணறுவெட்டிக்
கும்பிடச் சாமிவைத்துப்
படிக்க மடங்கட்டும்
பாண்டியனூர் பேரரசே.

எட்டுக் கடுவாயாம்
இருநூறு புல்வாயாம்
பட்டுக் கிடக்குதில்ல
பாண்டியனூர் வேட்டையிலே
ஆனையைக் குத்தி
அடைய நிலைநிறுத்தி
சிங்கத்தைக் குத்திச்
செயங்கொண்டு வாராக.

வண்டுகள் ஆட
வாள்மறவர் களம்பாடப்
பெண்டுகள் ஆடப்
பெரும்புலவர் கவிபாட
வண்டாடும் பூமலரை
வையகத்தார் கொண்டாடச்
செண்டாடும் பூமலரைத்
தேசத்தார் கொண்டாட
நாட்டுக் கதிபதியாம்
நல்லதுரை பெற்றகண்ணே.

மதுரைச் 'செசன்கோடு'
மாருத 'ஈரங்கி'யாம்

மன்னர்தம் வாயசைந்தால்
மணிமணியாய்க் 'கேசு'டையும்.

தெற்கத்திச் 'செசன்கோடு'
தீராத 'ஈரங்கி'யாம்
சீமான்தம் வாய்திறந்தால்
சீக்கிரமாய்க் 'கேசு'டையும்.

[தன்னைப்பற்றி ஒருசொல் சொல்லிக் கொண்டால் என்ன ? இந்தக் கொள்ளையிலே எவர் காதில் விழப் போகிறது ?]

என்யானைக் கன்றே
இளயானைக் குஞ்சரமே
போர்யானைக் கன்றே
புலிக்குட்டிப் பேரரசே.

## 13. வாரி இறையுங்கள் வரிசைமகன் காதரிசி

கொண்டாட்டம் என்றுலே எல்லாருக்கும் கொண் டாட்டம்தான். விழாவை விரும்பாத கிழவர் கிழவியர் எவரும் உண்டா? பல்முளையாக் குழந்தை முதல் பல் போய முதியர் வரை விழாவை விரும்புவர். அன்று வகைவகையான சாப்பாடு! பலகாரம்! துணிமணி!

ஊருக்கெல்லாம் பொதுவாக அமைந்த விழாவினும் வீட்டுக் கொண்டாட்டத்திற்குத் தனிச்சிறப்பு இல்லையா! மூலையிலே முடங்கிக் கிடப்பவர் ஆனால் என்ன, எவரும் ஏறிட்டுப் பார்க்காமல் ஏச்சுப் பேச்சுக்கு ஆளாகி இருப்பவர் ஆனால் என்ன, வீட்டுக்கு இளைத்து இரங்கத் தக்கவராக இருப்பவர் ஆனால் என்ன, எல்லாருக்குமே கொண்டாட்டம் இன்பம்தான்.

அயலார் — உற்றார் — உறவினர் — அன்பர் — நண்பர் ஆகிய பலரும் வரிசை வரிசையாக வந்து 'தாமரைக் காடு' போல வீடு ஒரே மகிழ்ச்சியாக இருப்பதில் கலந்து கொள்ளாமல் இருக்க எவருக்கு இயலும்?

அதிலும், "எங்கே பெரியவர்? பெரியம்மா எங்கே? தாத்தாவைக் காணவில்லையே! பாட்டிக்கு என்ன!" என்றெல்லாம் வந்தவர்கள் தனித்தனி கேட்பதும், அவர் களைப் பாராட்டிப் பேசுவதும், அவர் பழைமையான நினைவு களைக் கூறி எழுச்சியுண்டாக்குவதும் அவர்களைச் சொக்கிப்போக வைத்துவிடும் அல்லவா! அவர்கள் பட்டுப்பட்டு அழுந்திவரும் அல்லல்களை யெல்லாம்

ஆற்றும் மருந்து கொண்டாட்டம் என்ருல் அதன் பெருமையே பெருமை!

அந்த நல்ல நாளைக் கொண்டாடுதற்கு நமக்கு அழைப்பு விடுகிருள் தாய். அவளுக்கும் செலவு இல்லை; நமக்கும் செலவு இல்லை. ஆனல் கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட இன்பத்திற்கு மட்டும் குறைவு இல்லை.

தன் கண்ணுன கண்ணனுக்கு அல்லது கண்ணம் மாளுக்குக் காது குத்து வைக்கின்ருள். அதனைக் கட்டியங் கூறிக் களிப்போடு அழைக்கின்ருள்; வரவேற்கின்ருள். காதுகுத்தினை மகிழ்ச்சியோடு நடத்துகின்ருள். காது குத்தப்படுபவர்களுக்குத் தானே வலி! பார்ப்பவர்களுக்கு வலி இல்லை! கேட்கும் நமக்குக் காது வலி யுண்டா? அதனல் இனிக்கக் கேட்கலாம்! மாமன் சீர் வரிசைகளை எண்ணிக் கணக்கிடலாம்! அதில் தானே அந்தத் தாய்க்கு இன்பம் பொங்கித் ததும்புகிறது! நாம் எண்ணத் தவறி விட்டால் அவளுக்கு முகத்தில் சுழிப்பு ஏற்பட்டு விடுமே!

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறென் றறியேன் பராபரமே"

எனத் தாயுமானவரைப் போல நாமும் இருப்போமே! இருக்க முடியாவிட்டாலும் அந்த முயற்சியை யாவது தாயின் வழியில் — மொழியில் — இருந்தாவது மேற் கொள்ளலாமே.

மரிசல் திறந்து
மடிப்படா நெல்லெடுத்துக்
கொட்டாரம் தூர்த்துக்
குத்தவிட்டார் பச்சரிசி.

எள்ளும் இருகலமாம்
இளந்தேங்காய் முந்நூறு
பாக்குப் பதின்கலமாம்
பச்சரிசி முக்கலமாம்.

* * *

வினா : கண்ணான கண்ணனுக்குக்
காதுகுத்த என்ன செல்லும்?

விடை : தங்கம் ஒருகளஞ்சு
தனித்தங்கம் கால்களஞ்சு
எள்ளுக் குறுணி
இளந்தேங்காய் முந்நூறு
கொல்லத்து வில்லை
கோட்டாற்று ராயவில்லை
வங்காளப் பச்சரிசி
வந்திறங்கும் செல்வனுக்கு.

வாரி இறையுங்கள்
வரிசைமகன் காதரிசி
அள்ளி விளம்புங்கள்
அருமைமகன் காதரிசி.

தோட்டம் திறந்து
தொண்ணூறுலட்சம் பூவெடுத்து
பொன்னால் வைரக்கம்மல்
புதுப்பித்தார் உன்மாமன்.

காஞ்சிபுரம் பட்டெடுத்துக்
காதுகுத்த வருவார்கள்
இந்தச்சீர் செய்தவர்க்கு
என்னசீர் செய்திடுவாய்?

மாணிக்கத் தொட்டிலிலே
வளர்ந்த குமரனுக்குக்
காணிக்கை கொண்டுவந்து
காண்பார் வெகுசனங்கள்.

முத்தளக்க நாழி
முகப்புக்குக் கல்லமுத்தி
வைத்தளக்கச் சொல்லி
வரிசையிட்டார் தாய்மாமன்.

தங்கம் பிறந்து
தவழ்ந்துவிளை யாடுகையில்
தங்கமணிப் பொற்காப்புத்
தண்டையிட்டார் பாட்டையா.

காஞ்சி புரத்திலே
காசுக்கோர் பூமாலை
கண்டவர்கள் சொல்லிடுங்கள்
கொண்டுவந்து மாலையிட.

## 14. வேறொருவர் தஞ்சமில்லை

விருந்தினுல் விளங்கிய வீடு - விழாவினுல் பொலிவான வீடு—ஒருநாள் மருந்தில் மண்டிக் கிடக்கவும் ஆகிவிடும். முழு நிலாவிலே ஆடித் திரிந்த பிள்ளைகள், காரிருள் கப்பிக் கொண்ட நாளிலே கதவுக்குள் அடங்கி ஒடுங்கி விடுவது இல்லையா! அதுபோல்.

பெரியவர்கள் உடலுக்கு ஏதாவது வந்தால் கூட வீட்டில் கொஞ்சம் அமைதி இருக்கும். குழந்தைகளுக்கு ஒன்று வந்துவிட்டால் போதும்! வீடே படுத்து விடும்! வேலையும் படுத்துவிடும்! குழந்தையைத் தன் உயிராகக் கொண்ட தாய் நிலையைக் கூற வேண்டுமா? இரங்கத் தக்கது அவள் நிலை.

பிள்ளைக் கனி அமுதை முத்தி 'முத்தியின்பமே' கொண்டவள் தாய்! குழந்தைக்கு நோய் என்றவுடன் ஊணை மறக்கின்ருள்; உறக்கத்தை மறக்கின்ருள்; தன்னையும்மே மறந்து போகின்ருள். இன்பத்தின் எல்லையாக இருக்கும் குழந்தை தான் துன்பத்தின் எல்லையும் போலும். அந்தோ! தாய்மையே என்றுதான் சொல்ல வேண்டும்.

பிள்ளைப் பேற்றுக்காக அவள் போகாத இடம் இல்லை; சுற்ருத கோயில் இல்லை; முழுகாத நன்னீர் இல்லை; செய்யாத நோன்பு இல்லை! இப்பொழுது பிள்ளைக்கு 'நோய்' என்றதும் அதே நிலைதான்! மருந்துக்குக் கட்டுப்படாத நோயையும் மாற்றும் ஆற்றல் தெய்வத்துக்குத்தான் உண்டு என்று அந்தத் தாய் உள்ளம்

கருதுகின்றது. வேண்டாத வேண்டுதல்களை யெல்லாம் வேண்டுகின்றது; நேராத நேர்த்திக் கடன்களை யெல்லாம் நேர்ந்து கொள்கின்றது. தெய்வத்தையே தஞ்சமாகித் தவங்கிடக்கின்றது. குழந்தைக்காகத் தன்னையும் இழப்பதில் இன்புறும் தெய்வ வுள்ளம் அல்லவா தாயுள்ளம்! அவ்வுள்ளத்தின் உணர்வுத் துடிப்பை உரையால் எழுதிக் காட்ட இயலுமா? அவளே சொல் கின்ருள்.

கந்தையா உன்காவல்
　　கண்ணேறு தைக்காமல்
வேலையா உன்காவல்
　　வேறுபிணி சாடாமல்
சுப்பையா உன் காவல்
　　சொப்பனங்கள் தோன்ருமல்

கந்தையா உம்மருந்து
　　கடைமருந்து நானறியேன்
சொல்லையா உம்மருந்து
　　சொப்பனத்தில் தேடிவந்து

வாருமய்யா கந்தரே
　　வரங்கொடும் வேலவரே
தீருமய்யா கந்தரே
　　திருப்பழனி வேலவரே.

பச்சை மயிலேறிப்
　　பருமயிலைத் தோளணைந்து
வன்ன மயிலேறி
　　வந்தபிணி பாருமையா.

தங்கமோ பொன்னே
　　தனிவிளையும் சம்பாவோ
வேளாண்மை நீயெனக்கு
　　வேருருவர் தஞ்சமில்லை.

## 15. வண்ணக் குடைபிடித்து வாசிக்க வந்தவள்

"தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போயிற்று" என்பது பழமொழி. அதுபோல் குழந்தைக்கு வந்த கொடு நோய் கடிது மறைந்தது. கடுவெயிலில் வாடிய கீரைத் தண்டு காலையில் செழித்து நிமிர்ந்து காணப்படுவது இல்லையா! அதுபோல் குழந்தை நலம்பெற்றது. தாயின் உள்ளம் குளிர்ந்தது.

குழந்தைக்கு உடல்நலம் மட்டும் போதுமா? உள்ள நலம் வேண்டாவா? அவ்வுள்ள நலம் எப்படி உண்டாம்? கல்வியால் அல்லவா உண்டாகும். ஆகவே, கல்வியின் மேல் தாயின் உள்ளம் தாவுகின்றது. ஊரார் மெச்ச வேண்டும்; தன் உச்சி குளிர வேண்டும் என்றால் கல்வி அறிவிலும், ஆற்றலிலும், பண்பிலும் அவனை முதன்மை யானவன் ஆக்கவேண்டுமே!

மக்களை அறிவு, ஆற்றல்களில் முதன்மையாக்க வேண்டிய பொறுப்பைத் தந்தைக்கு மட்டும் விட்டுவிடத் தாய் விரும்பமாட்டாள். தன் பங்கும் இருக்கவே ஆவலுறுவாள்! "இவனைப்பெற்ற வயிறுடையாள் என்ன நோன்பு நோற்றாளோ" என்று பாராட்டுபவர் வாய், "பெற்றவர் செய்த பாவம் பிள்ளையாய்ப் பிறந்ததாமே" என்று பழிக்கவும் செய்யுமே! ஒன்றில் பங்குகொள்ள உரிமை உள்ளவள் மற்றொன்றுக்கு உரிமை இல்லாதவ ளாகப் போய்விடமுடியுமா? அதனால்தான் தன் பிள்ளை யின் கல்வியில் கருத்துச் செலுத்துகின்றாள் அன்னை.

திருநாவுக்கரசர் அப்பூதியடிகளார் இல்லத்திற்கு வந்தார்; அவருக்கு விருந்து செய்ய அப்பூதி அடிகளும் அவர்தம் மனைவியாரும் விரும்பினர். நாவுக்கரசர் நல்ல தொண்டர்; அவருக்குத் தொண்டு செய்ய வாய்க்கவேண்டுமே என்று பெருமிதம் கொண்டனர் பெற்றோர். அந்தப் பெருமிதத்தில் அவர்கள் மூத்த செல்வன் மூத்த திருநாவுக்கரசுக்குப் பங்கு கிடைத்தது. விருந்துண்ணுதற்கு இலைபறித்துக் கொண்டுவரும் வாய்ப்புக் கிடைத்தது! தன்பேற்றை எண்ணி மகிழ்ந்தான்; பெற்றோரை வாழ்த்தினான். "நல்லதாய் தந்தை ஏவ நானிது செய்யப் பெற்றேன்" என்றான்! இஃதன்றோ நல்ல குடும்பம்! "நல்ல தாய் தந்தை" என்று மக்கள் நினைக்க வேண்டும்; "நல்ல பிள்ளை" என்று பெற்றோர் நினைக்க வேண்டும். இந்த "நல்ல" என்னும் சொல்லிலும் "நல்ல" பட்டம் ஒன்று உண்டா?

அந்தப் பட்டத்திற்குத் தன் பிள்ளையை ஆளாக்கத் தாய் தணியாக் காதல் கொண்டாள். அதனால் பாலூட்டித் தாலாட்டும்போதே, காலாட்டிக் கையாட்டித் தவழும் போதே அந்த நல்ல கருத்தினைத் தன் செல்வக் குழந்தைகளின் செவிகளில் போட்டு வைக்கின்றாள்!

தாய்க்குக் கற்பனைப் பஞ்சம்தான் இல்லையே! இசைப் பஞ்சம்தான் உண்டா? அவள் எண்ணுவதெல்லாம் பாட்டு! அவள் பாடுவதெல்லாம் இசை! அவளுக்குச் சொற்கள் ஏவல் செய்யக் காத்துக்கிடக்கின்றன. 'இம்' என்றதும் 'இருநூறும் முந்நூறும்' கிளம்புகின்றன.

பொன்னால் எழுத்தாணி
புத்தகமும் பட்டோலை

சின்னையா கொண்டுவந்தார்
சிறுபொழுது கண் வளராய்.

வெள்ளியினுல் பேழுவாம்
வெண்கலத்தால் மைக்கூடு
தங்கத்தால் கடிகாரம்
தருவிப்பார் தாய்மாமன்.

கட்டி மகளே நீ
கட்டிவைக்கும் புத்தகமே
பாராமல் வாசிக்கும்
பரமகுரு வம்மிசமே.

தெள்ளமுதம் உண்டு
தெவிட்டாக் கனியுண்டு
உள்ளங் குளிர
உரையாடும் பைங்கிளியே!

சின்ன நடைநடந்து
சித்திரப்பைப் பின்னலிட்டு
ஏடெடுத்துத் தோளிலிட்டு
எழுத்தாணி கைப்பிடித்து
வண்ணக் குடைபிடித்து
வாசிக்க வந்தகண்ணே.

---

## 16. ஆராரோ ஆரிவரோ ஆராரோ

நாடு போற்றும் நல்லவர்களைத் தாய் நன்றாக அறிவாள். ஆதலால் அவர்களைப் பெற்றெடுத்த தாய்மார்களுள் தானும் ஒருத்தியாக இருக்கவேண்டும் என்னும் ஆவல் அவளுக்கு மட்டும் இல்லாமல் போகுமா? இதனைத் தற்பெருமை என்று ஏன் கொள்ள வேண்டும்? உலகத்திற்கு நன்மை செய்யும் பேரருள் நோக்கம் என்று சொல்லலாமே! "தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து, மன்னுயிர்க் கெல்லாம் இனிது" என்பது பொய்யா மொழி அல்லவா!

தாய் தான் அறிந்த—கதைகளில் படித்தும் கேட்டும் அறிந்த—இராமன், கண்ணன், முருகன், விசயன், பாண்டியன், அல்லி, வள்ளி இப்படி இப்படி எண்ணற்றவர்களை எண்ணுகிறாள். அவர்களுள் "நீ யார்? யார்? யாரோ?" என்று என்று வினவுகின்றாள். ஏன்? அவர்களுள் ஒருவனாக - ஒருத்தியாக - இருக்க வேண்டும் என்பது அவள் தணியாத ஆவல். நல்ல ஆவல் தானே!. அதனால் தான், "ஆர் ஆரோ ஆர் இவரோ ஆர் ஆரோ?" என்று அடுக்கி வினவுகின்றாள்.

வெறும் ஓசைக்காக "ஆராரோ ஆராரோ" என்று கூறுகிறாள் என்பதால் அத் தாய்க்குத்தான் என்ன பெருமை? அந்தத் தாலாட்டு இசைக்குத்தான் என்ன பெருமை?

"தாய் எட்டடி பாயும் என்றால் குட்டி பதினாறடி பாயும்" என்பது பழமொழி. "புலிக்குப் பிறந்தது பூனை ஆகுமா?

என்பதும் பழமொழி. ஆதலால், தம்பினும் பிள்ளைகளைப் பெருமையாகக் காணவேண்டும் என்று எண்ணுவதிலோ, இவர் இவரைப் போல் ஆகவேண்டும் என்று கூறுவதிலோ மறுப்புக்கு என்ன உண்டு! ஆதலால் வெளிப்படவே தாய் கூறுகிறாள்.

ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ.
சீதை மகனோ ?
சீராமர் பெற்றகண்ணோ ?
அல்லி மகனோ ?
அருச்சுனர் பெற்றகண்ணோ ?

சேவற் கொடியோனோ
திருமால் மருமகனோ
பார்வதியாள் பெற்றெடுத்த
பன்னிருகை வேலவனோ ?

கரும்புக் கணையானோ ?
கன்னிவள்ளி நாயகனோ ?
பரமன் தலையடித்த
பார்த்தனும் நீதானோ ?

பச்சைமுடி மன்னவரோ ?
பவளமுடிப் பாண்டியரோ ?
அச்சமெல்லாம் தீர்க்கவந்த
ஆதி பகவானோ ?

ஆற்றைத் திரைபோட்டு
அக்கரையில் கோட்டைகட்டிச்
காற்றைப் பிடித்தடைக்கும்
காசிராசர் வம்மிசமோ ? —ஆராரோ

[தாய் தாலாட்டு மட்டும்தான் "ஆர்ஆரோ" என வினவுகின்றதா? இதோ! கவிமணி தாலாட்டி வினவு கின்றார்]

பாலமுதம் உண்டுதமிழ்ப்
    பாமாலே பாடிஇந்தத்
தாலம் புகழவரும்
    சம்பந்தன் நீதானே?

கொன்றையணிந் தம்பலத்தில்
    கூத்தாடும் ஐயனுக்கு
வன்றொண்ட னாக
    வளர்ந்தவனும் நீதானே?

கல்லேப் பிசைந்து
    கனியாக்கும் செந்தமிழின்
சொல்லே மணியாகத்
    தொடுத்தவனும் நீதானே?

பூவில் அயனுமிந்தப்
    பூமீது வள்ளுவர்தம்
பாவின் நயமுணரப்
    பாலகனாய் வந்தானே?

புள்ளி மயிலோடு
    புனங்காத்து நிற்குமந்த
வள்ளி மணவாளன்
    மதலேயாய் வந்தானே?

நாலா யிரக்கவியின்
    நல்லமுதம் உண்டிடமால்
பாலாழி நீங்கியொரு
    பாலகனாய் வந்தானே? —ஆராரோ

[பெண்பிள்ளேக்கு "ஆர்ஆரோ" என்று சுட்டிக் காட்ட ஆள் இல்லேயா! இதோ தமிழறிஞர் இராய. சொ. பாடுகின்றார்]

சிறக்கும் தமிழ்மொழியில்
    சீலம் செறிந்த
அறத்தை இனிதருளும்
    ஔவையாள் நீதானோ?

தீர்த்தன் அறம்வளர்த்த
    செல்வியெனும் எங்கள்சீர்ச்
சாத்தனுர் சாற்றுமணி
    மேகலையும் நீதானோ?

பாடிக் கொடுத்தும்
    பரமன் அடியிணைக்குச்
சூடிக் கொடுத்த இளந்
    தோகையாள் நீதானோ?

சீரைப்பார்த் துக்கணவன்
    செல்லத் தமிழ்பாடிக்
காரைக்கால் வந்தவுயர்
    காரிகையும் நீதானோ?

செங்கோன்மை நாட்டியே
    தென்பாண்டி நாடளித்த
மங்கையர்க்குப் பேரரசாம்
    மாதரசி நீதானோ —ஆராரோ

———

## 17. பிள்ளைத் தமிழ்

தாய்மார் வளர்த்த 'தாலாட்டுத் தமிழ்' புலவர் உலகில் பிள்ளைத் தமிழாக உருக் கொண்டது. தாய்மார்களின் நாவில் எளிமையும் இனிமையும் கொஞ்சி விளையாடின; புலவர்களின் நாவில் கலையும் கற்பனையும் களிநடம் புரிந்தன. தன் பிள்ளையைத் தொட்டிலிலும் தூரியிலும் போட்டுத் தாலாட்டு இசைத்தாள் தாய். ஆனால் புலவர் உலகம், உலகைப் படைத்தவர்களையே குழந்தையாகப் படைத்துத் தம் கற்பனைத் தொட்டிலில் கிடத்திப் பண்ணெழுப்பிப் பாடி மகிழ்ந்தது! தெய்வங்களுக்குப் பாடப் பெற்ற தாலாட்டு, தெய்வத் தன்மை வாய்ந்த பெரியோர்களுக்கும் பின்னாளில் பாடப் பெறுவதாயிற்று. தமிழ் இலக்கிய உலகில் பிள்ளைத் தமிழுக்கு ஒரு சிறந்த இடமும் உண்டாயிற்று. பத்துப் பருவங்கள் வகுத்து ஒவ்வொரு பருவத்திற்கும் பத்துப் பாட்டு இசைக்கும் வரம்பும் உண்டாயிற்று. இவ் வளர்ச்சிக்கு வித்து தாய்மார் வளர்த்த தாலாட்டுத் தமிழ்தானே!

இதோ! கண்ணனை வண்ண மகவாக்கித் தாலாட்டு இசைக்கின்றார் பெரியாழ்வார்.

"மாணிக்கங் கட்டி வயிரம் இடைகட்டி
ஆணிப்பொன் னாற்செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே தாலேலோ
—வையம் அளந்தானே தாலேலோ."

"சங்கின் வலம்புரியும் சேவடிக் கிண்கிணியும்
அங்கைச் சரிவளையும் நாணும் அரைத்தொடரும்
அங்கண் விசும்பின் அமரர்கள் போத்தந்தார்
செங்கட் கருமுகிலே தாலேலோ
— தேவகி சிங்கமே தாலேலோ"

உலகீன்ற அன்னை மீனாட்சியைத் தொட்டிலில் கிடத்திக் குமர குருபரர் தாலாட்டு இசைக்கிறார்:

"தென்னன் தமிழின் உடன்பிறந்த
சிறுகால் அரும்பத் தீயரும்பும்
தேமா நிழற்கண் துஞ்சுமிளஞ்
செங்கட் கயவாய்ப் புனிற்றெருமை

இன்னம் பசும்புல் கறிக்கல்லா
இளங்கன் றுள்ளி மடித்தலநின்
றிழிபால் அருவி உவட்டெறிய
எறியும் திரைத்தீம் புனற்பொய்கைப்

பொன்னங் கமலப் பசுந்தோட்டுப்
பொற்று தாடிக் கற்றை நிலாப்
பொழியும் தரங்கம் பொறையுயிர்த்த
பொன்போல் தொடுதோல் அடிப்பொலன்சூட்(டு)

அன்னம் பொலியும் தமிழ்மதுரைக்
கரசே தாலோ தாலேலோ!
அருள்சூற் கொண்ட அங்கயற்கண்
அமுதே தாலோ தாலேலோ!"

திருத்தொண்டர் புகழ்பாடிய சேக்கிழார் பெருமானைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டு இசைத்து இன்புறுகின்றார் பெரும்புலவர் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை:

சோறு மணக்கும் மடங்களெலாம்
தூய்மை மணக்கும் சிந்தையெலாம்
சுவணம் மணக்கும் ஆடையெலாம்
தொங்கல் மணக்கும் தோள்களெலாம்

சேறு மணக்கும் கழனியெலாம்
செல்வம் மணக்கும் மாடமெலாம்
தென்றல் மணக்கும் மேடையெலாம்
தெய்வம் மணக்கும் செய்யுளெலாம்

நீறு மணக்கும் நெற்றியெலாம்
நெய்யே மணக்கும் கறிகளெலாம்
நெருப்பு மணக்கும் குண்டமெலாம்
நேயம் மணக்கும் வீதியெலாம்

சாறு மணக்கும் குன்றத்தூர்த்
தலைவா தாலோ தாலேலோ!
சகலா கமபண் டிததெய்வச்
சைவா தாலோ தாலேலோ!

Y73(P31):351
N75
TAMIL NADU ARCHIVES ... MADRAS
105811

கழக வெளியீடு: கருஙுஅ

பதிப்பாளர் :

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்,

தலைமை நிலையம் :

1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.

கிளை நிலையங்கள் :

திருநெல்வேலி - 6.
மதுரை-1. கோயமுத்தூர்-1. கும்பகோணம்-1.
திருச்சி-2.

அப்பர் அச்சகம், சென்னை-1.